සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/MF/05/Action plan/2018 | ඔබේ අංකය<br>உமது இல:<br>Your No | ........................................ | දිනය<br>திகதி:<br>Date | 2017.10.19 |
|---|---|---|---|---|---|

பிரதேச செயலாளர் ஊடாக
சகல சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும் வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.

## <u>சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் வங்கங்களுக்கான 2018ஆம் ஆண்டுக்குரிய செயற்பாட்டு திட்டமிடலைத் தயாரித்தல்.</u>

நிறுவனத்துக்குரிய செயற்பாட்டு திட்டமிடல் ஒன்றினைத் தயாரித்தல் தொடர்பான கோட்பாட்டு ரீதியானதும் மற்றும் செயற்பாட்டு ரீதியானதுமான விளக்கத்தினைக் கொண்ட ஒரு நாள் பயிற்சிப் பட்டறை அனைத்து சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

2. இப்பயிற்சிப் பட்டறையின் போது சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களுக்கான செயற்பாட்டுத் திட்டமிடலை தயார் செய்வதற்குரிய பொதுப்படிவம் ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டது (அதன் திருத்தப்பட்ட 08 படிவங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது). வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் நடைமுறைச் செயற்பாட்டுகளை உள்ளடக்கி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் நோக்கம், குறிக்கோள்களுக்கு பொருத்தமான விதத்தில் 2018ஆம் ஆண்டுக்குரிய செயப்பாட்டுத் திட்டமிடலை சகல வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களும் தயாரித்தல் வேண்டும்.

3. இங்கு ஒவ்வொரு சமுர்த்தி வங்கியும் தனித்தனியான செயற்பாடு திட்டமிடலை தயாரிக்க வேண்டியதுடன் வங்கிச் சங்கம் தமது அதிகார பிரதேசத்தினுள் உள்ள அனைத்து வங்கிகளினதும் செயற்பாட்டு திட்டமிடலை உள்ளடக்கி தமது வங்கிச் சங்கத்துக்கான ஒன்றிணைந்த செயற்பாட்டு திட்டமிடலை தயாரித்து பிரதேச செயலாளரின் அனுமதியுடன் 2017 நவம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் dibanksocityho@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் தபால் மூலம் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் அதன் பிரதியினை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | Hot Line: 011- 2887722 |
| E-mail- | dg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | finance@divineguma.gov.lk | Hot Line:0112-885582 | |
| | | Hot Line : 0112-889007 | | | |

tran/jawh/mif

4. 2018ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு திட்டமிடலை தயாரிக்கும் போது வங்கிச் சங்க முகாமையாளரினால் (பயிற்சி நெறியில் கலந்து கொண்ட பொருத்தமான உத்தியோகத்தரினால்) வங்கி முகாமையாளருக்கு அறிவூட்டப்படல் வேண்டும் என்பதனையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களைப் பயன்படுத்தி சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் பல்வேறு வேலைத்திட்டங்கள்/ செயற்பாடுகளை உள்ளடக்கி 2018ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டமிடலை தயாரிக்க வேண்டும் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். 2018ஆம் ஆண்டுக்கான முன்னேற்ற மீளாய்வின் போது இச்செயற்பாட்டுத் திட்டங்களை அடிப்படையாக வைத்தே உரிய முன்னேற்றங்கள் ஆய்வு செய்யப்படவுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

5. இது தொடர்பாக எதும் பிரச்சினைகள் காணப்படின் 011-2887469 மற்றும் 011-3054528 தொலைபேசிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

6. இவ்விடயத்துக்கு தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பினை பெரிதும் மதிக்கின்றேன்.

ஓப்பம்:
H.K.A. ரஞ்சித் உதயசிறி
பணிப்பாளர் (குறுநிதி)
பணிப்பாளர் நாயகத்துக்காக

பிரதி:-
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காகவும்,
உரிய நடவடிக்கைக்காகவும்.

Translated By: I. Aliyar.